Appendix

[*Vide* answer to starred question No. 228 on page 42]

நகராட்சி உறுப்பினர் திரு ராஜய்யாவிடம் தகாத முறையில் நடந்து கொண்டதாகவும், பொதுமக்களைத் துன்புறுத்தியதாகவும், ஸ்ரீமாதவ தேசிக சுவாமிகள் மண்டல பூசையைத் தடுத்ததாகவும் குற்றம் சாட்டப் பட்டுள்ள திண்டுக்கல் வட்ட, காவற்றுறைத் துணை மேற்பார்வையாளர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று திண்டுக்கல் நகராட்சி மன்றம் 1968ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 29ந் தேதியில் தீர்மானம் நிறைவேற்றியது. இது பற்றி விசாரணை நடத்திய மதுரை வடக்குக் காவல்துறை கண்காணிப் பாளர் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்று தீர்மானித்தார். அவர் "இந்த நாட்களில் பூசை நடந்தபோது புகார் எதுவும் இல்லை, ஒவ்வா நிகழ்ச் சிகள் எதும் நடைபெறவில்லை. துணை மேற்பார்வையாளர் மீது கூறிய குற்றச்சாட்டுக்கள் யாவும் பொய்யானவை" என்று நகரசபைத் தலைவருக்கு ஒரு கடிதம் மூலம் தெரிவித்தார். இந்தக் கடிதம் நகராட்சியின் தக வலுக்காகப் பார்வைக்கு வைக்கப்பட்டு 1968ம் ஆண்டு ஜூலை மாதம் 6-ம் தேதி நடந்த கூட்டத்தில் பதிவு செய்யப்பட்டது.

2 ஒடுக்கம் கிராமம், திண்டுக்கல் நகரிலிருந்து சில மைல் தொலைவில் உள்ளது. குற்றம் கூறப்பட்ட நிகழ்ச்சி தனியார் இடத்தில் நடந்ததாகவும் நகராட்சி மன்ற உறுப்பினர் திரு ராஜய்யா இதில் சம்பந்தப்பட்டுள்ளதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 நகராட்சி மன்றக் கூட்டங்களில் தீர்மானங்களை நிறைவேற்றுவது சம்மந்தப்பட்ட விதிகள் குறித்த நகராட்சிக் கையேட்டின் 3வது பாராவில் 2 (b) விதியின் கீழும் இந்த நிகழ்ச்சி நகராட்சி எல்லைகளுக்குள் நடை பெற வில்லையாதலின் இது நகராட்சி நிர்வாகத்திற்குக் கட்டுப்படாததாகும். நகராட்சி உறுப்பினர் சம்பந்தப்பட்டிருப்பதும் அவரது தனிப்பட்ட முறையில்தான்.

4 திண்டுக்கல் காவல்துறை உதவிக் கண்காணிப்பாளரின், கட்டளைப்படி வட்டத்துணை மேற்பார்வையாளர் குருபூசையையும் மண்டல பூசையையும் முறையே 1968ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5ந் தேதியிலும் 1968ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27ந் தேதியிலும் சென்று பார்த்துப் போது மான காவல் பாதுகாப்பு அளித்தார்.

LIBRARY
9 - NOV 1970
STATE LEGISLATURE, MADRAS